AKHBAR : KOSMO
TARIKH : 27.2.2013
M/S : 4

Kosmo 27/2/2013 m/s 4

Graduan kelas pertama luar negara diberi keutamaan

# Tawaran berkhidmat dalam sektor awam



**BAGAN DATOH** – Graduan yang memperoleh ijazah kelas pertama dari pusat pengajian tinggi luar negara diberi keutamaan untuk berkhidmat dalam sektor awam di negara ini.

Timbalan Pengerusi Suruhanjaya Perkhidmatan Awam (SPA), Datuk R. Segarajah berkata (**gambar**), lulusan cemerlang tajaan Jabatan Perkhidmatan Awam (JPA), Majlis Amanah Rakyat (MARA) dan kerajaan negeri diberi keutamaan untuk bekerja dalam sektor awam.

"Mereka (lulusan) akan melalui temu duga untuk membolehkan mereka membuat pilihan atau dilantik terus ke dalam perkhidmatan kerajaan," katanya.

Beliau berkata demikian kepada pemberita selepas merasmikan sesi interaksi SPA bersama ketua jabatan Persekutuan, badan-badan berkanun dan pertubuhan bukan kerajaan daerah Hilir Perak di sini semalam.

Menurut beliau, sekiranya graduan tersebut tidak mahu berkhidmat dalam sektor awam, mereka dibenarkan bekerja di sektor swasta melalui pengurusan Talent Corporation Malaysia Berhad.

Katanya, setakat ini seramai 100 lulusan cemerlang dari pusat pengajian tinggi luar negara ditawarkan untuk berkhidmat dalam sektor awam.

AKHBAR : MAKKAL OSAI

TARIKH : 26.2.2013

M/S : 1

# பொதுச்சேவைத்துறை ஆணையத்தில் இந்தியர்கள் 24 பேர் நியமனம்





புத்ரா ஜெயா, பிப்.26– பொதுச்சேவைத்துறையின் முக்கியப் பொறுப்புகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 298 மலேசியர்களுள் 24 பேர் இந்தியர்கள் என மலேசிய பொதுச்சேவைத் துறை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமுட் அடாம் அறிவித்துள்ளார்.

புத்ரா ஜெயாவில் நடைபெற்ற நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்ட அவர் PTD எனப்படும் நிர்வாக அதிகாரி, மருத்துவம், மருந்தியல்,பல் மருத்துவம்,தகவல் தொழில்நுட்பம்,போக்குவரத்து ஆகிய துறைகளுக்கான முக்கியப் பொறுப்புகளுக்காக நடத்தப்பட்ட நேர்காணலில் 1,185 பேர் கலந்து கொண்டதாகவும் அவர்களுள் 56 பேர் இந்தியர்கள் எனவும் தெரிவித்தார்.

கலந்து கொண்ட 56 இந்தியர்களுள் நியமனம் செய்யப்பட்டவர்களின் அடிப்படையில் இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பு

14ஆம் பக்கம் பார்க்க...

Makkal Osai 26-2-2012 M/S 1

## இந்தியர்கள் 24 பேர் நியமனம்...

முதல் பக்கத் தொடர்ச்சி...

8.5 விழுக்காடு என்றார் அவர்.

ஆணையம் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆணைய உருமாற்றுத் திட்டத்தின் ஓர் அம்சமாக நியமனக் கடிதங்கள் நேரடியாகவே வழங்கப்படுகின்றன.

இந்த அறிவிப்பின்போது பொதுச் சேவைத்துறையின் துணைத்தலைவர் டத்தோ ஆர்.சேகரராஜாவும் உடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

AKHBAR : TAMIL NESAN

TARIKH : 26.2.2013

M/S : 5

# எஸ்பிஏ ஆள்சேர்ப்பு 298 பேரில் இந்தியர்கள் 24

TAMIL NESAN 26-2-2013 M/S 5



*ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம். செயலாளர் டத்தோ ரம்லி.*

**புத்ராஜெயா, பிப். 26-**
அண்மைய எஸ்பிஏ ஆள்சேர்ப்பு நடவடிக்கையின்போது ஏழு வகையான வேலைகளுக்கு நேர்க் காணல் நடத்தப்பட்டது. மொத்தம் தேர்ந்தெடுக் கப்பட்ட 298 பேர் தேர்வு செய்யப் பட்டதில் இந்தியரின் எண்ணிக்கை 24. இது சம்பந்தமான விவரங்களை எஸ்பிஏ பொதுச் சேவைத் துறை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

பி.டி.டி. என்ற நிர்வாக அதிகாரி, மருத் துவ அதிகாரி, மருந்தியல் அதி காரி, பல்மருத்துவர், தகவல் தொழில்நுட்ப உதவி அதிகாரி, போக்குவரத்து உதவி அமலாக்க அதிகாரி போன்ற வேலைகளுக்கான நேர்க்காணலுக்கு 2,666 பேர் அழைக் கப்பட்டிருந்தனர். நேர்க் காணலுக்கு வந்த 1,185 பேரில் 56 இந்தியர்கள். இதில் 24 பேருக்கு வாய்ப்பு என்பது 42.85% வாய்ப்பு என்ற விளக்க மளிக்கப் பட்டது. ஆகமொத்தம் வழங்கப்பட்ட 298 வாய்ப்புகளில் 24 வாய்ப்புகள் இந்தியருக்கு என்பது 8.5 விழுக்காடு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 198 பேருக்கு நேரிடையாக நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவத்தில் எஸ்பிஏ என்ற பொதுச் சேவைத் துறை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் உரையாற்றினார். அப்போது பொதுச் சேவைத் துறை ஆணையத்தின் துணைத் தலைவர் டத்தோ ஆர்.சேக ராஜா உடன் இருந் தார். எஸ்பிஏ என்ற பொதுச் சேவைத் துறை ஆணையம் ஆரம் பிக் கப்பட்டு 50 வருடங்கள் கழித்து இப்போது இவ்வாறு நேரடி யாக நியமனக் கடிதம் வழங்கும் வழி முறை அமலுக்கு வருவதாக ஆணையத் தலை வர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரி வித்தார். எஸ்பிஏ மேற்கொண்டு வரும் 30 உருமாற்றுத் திட்டங்களில் இதுவும் ஒன்று. நியமன கடிதங்களை பெற்றவர்களுக்கு ஆணையத் தலைவர் அறிவுரை வழங்கினார். உங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்த எஸ்பிஏ உங்களை தேர்ந்தெடுத்துள்ளது. வழங் கப்பட்ட பொறுப்பினை பொறுப்பாக மேற்கொள்ள வேண்டும். தொழில் பக்தியுடன் விசுவாசத்துடன் நேர்மை யான வழியில் காரியமாற்ற வேண்டும். மக்கள் எல்லாம் அரசு ஊழியர்களின் வாடிக்கையாளர்கள்.அவர்களுடன் நட் புறவாக இருந்து கனிவாகவும் பண் பாகவும் காரியமாற்ற வேண்டும். இதற்கிடையே இணையத் தளத்தின் வழி நியமன கடிதங்களை வழங்கக் கூடிய சாத்திய கூறுகளை பொதுச் சேவைத் துறை ஆணையம் ஆராய்ந்து வருவதாக டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார். தொலைபேசி வழி அல் லது கடி தம் வழியாக அறிவிப்பு செய் வதை விட இத்தகைய இணையத் தள முறை சிறந்த வழி முறையாகவும் நல்ல தொரு சேவை யளிப்பு முறையாகவும் கருதப்படுகிறது என்று இவர் சுட்டிக் காட்டினார்.

AKHBAR : NANBAN
TARIKH : 26.2.2013
M/S : 5

# எஸ்பிஏ ஆள்சேர்ப்பு 298 பேரில் இந்தியர்கள் 24



Nanban 26-2-2013 M/S 5

புத்ராஜெயா, பிப்.27–

அண்மைய எஸ்பிஏ ஆள்சேர்ப்பு நடவடிக்கையின் போது ஏழு வகையான வேலைகளுக்கு நேர்காணல் நடத்தப் பட்டது. மொத்தம் தேர்ந்தெடுக் கப்பட்ட 298 பேர் தேர்வு செய்யப்பட்டத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை 24. இது சம்பந்தமான விவரங்களை எஸ்பிஏ பொதுச்சேவைத்துறை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

PTD என்ற நிர்வாக அதிகாரி, மருத்துவ அதிகாரி, மருந்தியல் அதிகாரி, பல் மருத்துவர், தகவல் தொழில் நுட்ப உதவி அதிகாரி, போக்குவரத்து உதவி அமலாக்க அதிகாரி போன்ற வேலைகளுக்கான நேர்காணலுக்கு 2,666 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நேர்காணலுக்கு வந்த 1,185 பேரில் 56 இந்தியர்கள் இதில் 24 பேருக்கு வாய்ப்பு என்பது 42.85 விழுக்காடு வாய்ப்பு என்று விளக்கமளிக்கப் பட்டது. ஆக, மொத்தம் வழங்கப்பட்ட 298 வாய்ப்புகளில் 24 வாய்ப்புகள் இந்தியருக்கு என்பது 8.5 விழுக்காடு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

198 பேருக்கு நேரிடையாக நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் எஸ்பிஏ என்ற பொதுச் சேவைத்துறை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் உரையாற்றினார்.

அப்போது பொதுச்சேவைத்துறை ஆணையத்தின் துணைத்தலைவர் டத்தோ ஆர்.சேகராஜா உடன் இருந் தார். எஸ்பிஏ என்ற பொதுச் சேவைத் துறை ஆணையம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் கழித்து இப்போது இவ்வாறு நேரடியாக நியமனக் கடிதம் வழங்கும் வழிமுறை அமலுக்கு வருவதாக ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

எஸ்பிஏ மேற்கொண்டு வரும் 30 உருமாற்றுத் திட்டங்களில் இதுவும் ஒன்று. நியமனக் கடிதங்களை பெற்ற வர்களுக்கு ஆணையத் தலைவர் அறிவுரை வழங்கினார்.

உங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்த எஸ்பிஏ உங்களைத் தேர்ந் தெடுத்துள்ளது. வழங்கப்பட்ட பொறுப் பினை பொறுப்பாக மேற்கொள்ள வேண்டும்.

தொழில் பக்தியுடன் விசுவாசத் துடன் நேர்மையான வழியில் செயலாற்ற வேண்டும். மக்கள் எல்லாம் அரசு ஊழியர்களின் வாடிக்கை யாளர்கள் அவர்களுடன் நட்புறவாக இருந்து கனிவாகவும் பண்பாகவும் செயலாற்ற வேண்டும். இதற்கிடையே இணையத்தளத்தின் வழி நியமன கடிதங்களை வழக்கக் கூடிய சாத்தியக் கூறுகளைப் பொதுச் சேவைத்துறை ஆணையம் ஆராய்ந்து வருவதாக டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

தொலைபேசி வழி அல்லது கடிதம் வழியாக அறிவிப்பு செய்வதை விட இத்தகைய இணையத்தள முறை சிறந்த வழிமுறையாகவும் நல்லதொரு சேவையளிப்பு முறையாகவும் கருதப் படுகிறது என்று இவர் சுட்டிக் காட்டினார்.

MAKKAL OSAI ,NANBAN DAN TAMIL NESAN

26.2.2013 DAN 27.2.2013

M/S : 1 DAN 5

**24 CALON KAUM INDIA TELAH DILANTIK OLEH SURUHANJAYA PERKHIDMATAN AWAM (S.P.A)**

Satu Majlis Penyerahan Surat Tawaran Pelantikan kepada 298 calon telah diadakan oleh Suruhanjaya Perkhidmatan Awam Malaysia (S.P.A) di Putrajaya. Jumlah calon yang dipanggil temu duga adalah seramai 1,185 orang dan calon India adalah seramai 56 orang. Daripada jumlah tersebut, seramai 24 calon kaum India telah berjaya dalam temu duga. Pada keseluruhannya, seramai 24 orang daripada 298 orang iaitu 8.05% telah menerima surat lantikan tersebut daripada Pengerusi S.P.A, YBhg. Tan Sri Mahmood Adam dan Timbalan Pengerusi, YBhg. Dato R.Segarajah. Mereka yang menerima surat lantikan terdiri daripada Pegawai Perubatan, Pegawai Farmasi, Pegawai Pergigian dan Penolong Pegawai Teknologi Maklumat. Pengerusi S.P.A,Tan Sri Mahmood Adam berkata majlis penyerahan surat tawaran pelantikan itu pertama kali diadakan sejak penubuhan S.P.A 50 tahun lalu. Kaedah ini lebih efisien, sistamatik dan mudah berbanding secara pos atau terus menghubungi calon melalui telefon atau email.